1972 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நிதி வசதி என்பது ஒன்று. அடுத்த படியாக அந்தத் தொலைபேசிகளை அமைப்பதற்கு பல்வேறு வாய்ப்புகள் தொடர்பு ஏற்படுத்துவதற்கான சில கருவிகள் இவைகளைப்பொறுத்தும், இருக்கிறது. ஏற்கெனவே தொடர்புடைய தொலைபேசிகள் இருக்கும் இடங்களில் வைப்பது சுலபமாக இருக்கிறது. தொலைபேசித் தொடர்பே இல்லாத இடங்களில் வைப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. இவைகளையெல்லாம் அனுசரித்துத்தான் படிப்படியாக இந்தக் காரியம் நடைபெற்று வருகிறது.

திரு. எம். தேவராசன்: நக்சல்பாரிகளை ஒடுக்குவதற்கு கூடலூர் மாவட்டத்தில் புதிதாக ஆறு காவல் நிலையங்கள் அமைப்பதாக அறிகிறேன். அவை காட்டுப் பகுதியில் இருப்பதால் டெலிபோன் வசதி மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக, அரசு அந்தக் காவல் நிலையங்களுக்கு உடனடியாக டெலிபோன் வசதிகள் ஏற்படுத்தித் தருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நக்சல்பாரிகளை அடக்குவதற்கு மாத்திரமல்ல, பொதுவாக குற்றங்கள் நடைபெறாமலிருப்பதற்கும், நடைபெற்ற குற்றங்களை உடனடியாக அறிந்து கொள்வதற்கும் காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி இருப்பது இன்றியமையாத ஒன்றாகும். அந்த இன்றியமையாமையை இன்றைக்கு நிறைவேற்றுவதற்காக அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதியும் இடம் பெறும்.

திருப்பூர் நகருக்கு புதைச்சாக்கடைத் திட்டம்

* 815 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) திருப்பூர் நகருக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கத் தேவையான ஆய்வு செய்ய, ரூபாய் 50,000-க்கான ஒரு ஆய்வு மதிப்பீடு முதனிலை அறிக்கையுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு தலைமைப் பொறியாளர் அனுப்பிவைத்துள்ளார். ஆய்வு வேலைகளை குடிநீர் வடிகால் வாரியம் ஏற்று நடத்துவதற்கும் அதற்கான செலவை ஏற்றுக்கொள்ளு

1972 ஏப்ரல் 1]

வதற்குமான நகராட்சியின் தீர்மானம் ஒன்று நகராட்சியிடமிருந்து கோரப்பட்டுள்ளது. தீர்மானம் கிடைக்கப் பெற்றபின் ஆய்வுக்கான மதிப்பிட்டிற்கான ஒப்பளிப்பு வழங்கப்படும்.

திரு சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, நகராட்சியிடமிருந்து தீர்மானத்தை எதிர்பார்ப்பதாக முதலமைச்சரவர்கள் கூறினார்கள். நகராட்சி தீர்மானத்தை விரைவில் போட்டுக்கொடுத்தால் அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தீர்மானம் நகராட்சியிடமிருந்து வந்ததும் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த நகராட்சிகளுக்காவது பாதாள சாக்கடை அமைத்துக்கொடுக்க அரசு ஏதாவது துரிதமாக திட்டம் அமைத்து, இப்பொழுது 72-க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் எலக்ட்ரிசிட்டி கொடுக்க வேண்டுமென்று இருப்பதைப்போல், எல்லா முனிசிபாலிட்டிகளிலும் பாதாள சாக்கடை அமைக்க வேண்டுமென்ற திட்டம் ஏதாவது இருக்கிறதா? நகராட்சி தீர்மானம் போடுகிறதோ இல்லையோ உடனுக்குடன் பாதாள சாக்கடை அமைக்க அரசாங்கம் அதிகாரமும், பணமும் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்காகவேதான் குடிநீர்வாரியம் அமைக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக இந்த முயற்சி முற்றுப் பெற வேண்டுமென்ற அடிப்படையில் பணி நடைபெறுகிறது. நகராட்சி தீர்மானம் போடுகிறதோ இல்லையோ என்று கூறிவிடுவது நல்லதல்ல. ஏனென்றால் நகராட்சிகளுக்கும் அதில் பொறுப்பு இருக்க வேண்டும். நகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பிலே இருக்கின்றவர்கள் அரசாங்கம் முயற்சியெடுத்துச் செய்யும் நேரத்தில் ஒத்துழைப்பு கொடுத்தால் காரியம் விரைவில் முடிவதற்கு ஏதுவாக இருக்கும்.

தோவாளை வட்டத்துக்கு குடிநீர்த்திட்டம்

*** 816 வினு—திரு. வி. கே. இராஜாப்பிள்ளை:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றியத்திலுட்பட்ட உலக்கையருவியில் விழும் தண்ணீரை அணைக் கட்டி தேக்கி தோவாளை, அகஸ்தீஸ்வரம் தாலுக்காக்களுக்கு குடிதண்ணீர் வினியோகம் செய்வதற்காக தோவாளை ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ஆய்வுக்கட்டணமாக (Investigation Charges) ரூ. 26,000 செலுத்தி வெகு நாட்களாகியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது உண்மையா?